# ஆண்டாள் அருளிச் செய்த
# நாச்சியார் திருமொழி

## மூன்றாம் திருமொழி - கோழி அழைப்பதன்
## கண்ணன் கவர்ந்த கூறைகளைக் கன்னியர் இரத்தல்

** கோழி அழைப்பதன் முன்னம் * குடைந்து நீராடுவான் போந்தோம் *
ஆழியன் செல்வன் எழுந்தான் * அரவணை மேல் பள்ளி கொண்டாய்! **
ஏழைமை ஆற்றவும் பட்டோம் * இனி என்றும் பொய்கைக்கு வாரோம் *
தோழியும் நானும் தொழுதோம் * துகிலைப் பணித்தருளாயே 1

இது என் புகுந்தது இங்கந்தோ! * இப்பொய்கைக்கு எவ்வாறு வந்தாய்? *
மது இன்துழாய் முடி மாலே! * மாயனே! எங்கள் அமுதே! **
விதி இன்மையால் அது மாட்டோம் * வித்தகப் பிள்ளாய்! விரையேல் *
குதி கொண்டரவில் நடித்தாய்! * குருந்திடைக் கூறை பணியாய் 2

எல்லே! ஈதென்ன இளமை? * எம்மனைமார் காணில் ஒட்டார் *
பொல்லாங்கு ஈதென்று கருதாய் * பூங்குருந்தேறி இருத்தி **
வில்லால் இலங்கை அழித்தாய்! * நீ வேண்டியது எல்லாம் தருவோம் *
பல்லாரும் காணாமே போவோம் * பட்டைப் பணித்தருளாயே 3

பரக்க விழித்தெங்கும் நோக்கிப் * பலர் குடைந்தாடும் சுனையில் *
அரக்க நில்லா கண்ண நீர்கள் * அலமருகின்றவா பாராய் **
இரக்கமேல் ஒன்றும் இலாதாய்! * இலங்கை அழித்த பிரானே! *
குரக்கரசு ஆவதறிந்தோம் * குருந்திடைக் கூறை பணியாய் 4

காலைக் கது விடுகின்ற * கயலொடு வாளை விரவி *
வேலைப் பிடித்து என்னைமார்கள் ஓட்டில் * என்ன விளையாட்டோ? **
கோலச் சிற்றாடை பலவும் கொன்டு * நீ ஏறி இராதே *
கோலம் கரிய பிரானே! * குருந்திடைக் கூறை பணியாய் 5

தடத்தவிழ் தாமரைப் பொய்கைத் * தாள்கள் எம் காலைக் கதுவ *
விடத் தேள் எறிந்தாலே போல * வேதனை ஆற்றவும் பட்டோம் **
குடத்தை எடுத்தேற விட்டுக் * கூத்தாட வல்ல எம் கோவே! *
படிற்றை எல்லாம் தவிர்ந்து * எங்கள் பட்டைப் பணித்தருளாயே 6

நீரிலே நின்றயர்க்கின்றோம் * நீதி அல்லாதன செய்தாய் *
ஊர் அகம் சாலவும் சேய்த்தால் * ஊழி எல்லாம் உணர்வானே! **
ஆர்வம் உனக்கே உடையோம் * அம்மனைமார் காணில் ஒட்டார் *
போர விடாய் எங்கள் பட்டைப் * பூங்குருந்தேறி இராதே 7

மாமிமார் மக்களே அல்லோம் * மற்றும் இங்கெல்லாரும் போந்தார் *
தூமலர்க் கண்கள் வளரத் * தொல்லை இராத் துயில்வானே! **
சேமமேல் அன்றிது சாலச் * சிக்கென நாம் இது சொன்னோம் *
கோமள ஆயர் கொழுந்தே! * குருந்திடைக் கூறை பணியாய் 8

கஞ்சன் வலை வைத்த அன்று * கார் இருள் எல்லில் பிழைத்து *
நெஞ்சு துக்கம் செய்யப் போந்தாய் * நின்ற இக்கன்னியரோமை **
அஞ்ச உரப்பாள் அசோதை * ஆணாட விட்டிட்டிருக்கும் *
வஞ்சகப் பேய்ச்சி பால் உண்ட * மசிமை இலீ! கூறை தாராய் 9

** கன்னியரோடெங்கள் நம்பி * கரிய பிரான் விளையாட்டை *
பொன்னியல் மாடங்கள் சூழ்ந்த * புதுவையர் கோன் பட்டன் கோதை **
இன்னிசையால் சொன்ன மாலை * ஈரைந்தும் வல்லவர் தாம் போய் *
மன்னிய மாதவனோடு * வைகுந்தம் புக்கிருப்பாரே 10

**ஆண்டாள் திருவடிகளே சரணம்**

---